[எண்சோதிடம் NUMEROLOGY]

# அதிர்ஷ்டம் அழைக்கிறது

S. J. V. SELVANAYAGAM
1 1 6 3 5 3 6 1 5 1 1 1 3 1 4 42

A. AMIRTHALINGAM
1 1 4 1 2 4 5 1 3 1 5 3 1 4 36

G. G. PONNAMPALAM
3 3 8 7 5 5 1 4 8 1 3 1 4 53



VIJEYENDRAN
6 1 1 5 1 5 5 4 2 1 5 36

ஆசிரியர்

**A. SIVARAJAH B. A., B. PHIL**

(ரூபா இரண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் பிறந்த திகதிக்

கேற்ப பெயர் அதிர்ஷ்

டமாக அமைந்து விட்

டால் தலை எழுத்தையே

மாற்றியமைக்கலாம்.

## பிரச்சனை எதுவானாலும் எனக்கு எழுதுங்கள்

1 உங்கள் பெயர்
2. தந்தை; பேரன் பெயர்கள்
3. பிறந்ததிகதி, மாதம், ஆண்டு, நேரம்
4. வழமையான கையொப்பம்

ஆகிய விபரங்களுடன் உங்கள் பிரச்சனையையும் குறிப்பிட்டு ரூபா 5 பெறுமதியான தபாற்காசுக்கட்டளையுடன் பதில் பெற விரும்புவோர் தமது விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய காகித உறையுடன்

ஆ. சிவராசா
1-ம் வட்டாரம்
வேலணை கிழக்கு
வேலணை

என்ற விலாசத்திற்கு எழுதக் கோருகிறேன்

❋ நேரில் சந்திக்க விரும்புவோர் முன்கூட்டியே காகிதம் எழுதி அனுமதியைப் பெற்றபின் தொடர்பு கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி எண்

ஒருவர் பிறந்த ஆங்கிலத் திகதியின் கூட்டெண்ணே விதி எண் என அழைக்கிறோம். இதைக் கூட்டெண் அல்லது பூரண எண் எனவும் அழைக்கலாம். உதாரணமாக 26-8-1947 ல் பிறந்த ஒருவரின் விதி எண் (2 + 6 + 8 + 1 + 9 + 4 + 7 = 37 = 3 + 7 = 10 = 1 + 0 = 1) ஒன்று என வரும். விதி எண்ணின் தன்மைகள் பற்றிச் சிந்திப்போம்.

## விதி எண் — ஒன்று

ஒன்று என்ற எண் விதி எண்ணாகக் கொண்டவர்கள் சுய நிர்ணயம், சுய கௌரவம், விசுவாசம், நன்றி, பயபக்தி, பொறுமை, கடுங்கோபம், அதிகாரம், அகங்காரம், அரசாட்சி, அபரிமிதம், மானம், மரியாதை, குடும்ப கௌரவம், பாரம்பரியம், கர்வம், தெய்வ நம்பிக்கை, பிடிவாதம், சமசியம், மூடநம்பிக்கை, காரிய வாதம், தற்பெருமை, ஆத்மீக வளர்ச்சி போன்ற அடித்தள இயல்புகள் கொண்ட மனதையுடையவர்.

## விதி எண் — இரண்டு

இரண்டு என்ற எண்ணை விதி எண்ணாகக் கொண்டவர் சக்தி வசப்பட்டவர். எண்ணம், ஆய்வு, யோசனை, கனிவு, திணிவு, செறிவு, ஒற்றுமை, சலனம், ஐயுறவு, காருண்யம், அங்கலாய்ப்பு, சமூக உணர்வு, சம்பிரதாயம், பிரச்சனை, பாலுணர்வு, பிரசாரம், பகுத்தறிவு, பேச்சுவார்த்தை, பிரசங்கம், நம்பிக்கை, பிரஸ்தாபம், கோளாறு, குழப்பம், புத்திமதி, புகழ், அபவாதம் முதலிய அடித்தள இயல்புகளில் செயற்படுவர்.

## விதி எண் — மூன்று

மூன்று என்ற விதி எண் ஞானம், துரிதம், ஆண்மை, ஆற்றல், தீரம், வீரம், நுண்ணோக்கு, புத்திக் கூர்மை, கொதி, சீற்றம், சினம், நிலை கொள்ளாமை, முற்கோபம், பின்னிரக்கம், காரசாரம், அவதி, கல்வி மேன்மை, கருத்து விருத்தி முதலிய அடித்தள மன இயல்புகளிற் தொழிற்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி எண் — நான்கு

நான்கு என்ற எண் விதி எண்ணுகவரின் புத்தி நுட்பம், வழக்சத்துக்கு மாருன கொள்கைகள், மறைபொருள் ஈர்ப்பு, மனோ தத்துவ ஆராய்ச்சி, திருப்தியீனம், எதிர்வாதம், வேற்றுமை, புதுமை உணர்ச்சி, நாஞவித ஈடுபாடுகள், நடன நாடக கலையுணர்வு, பிரத்தியேக நடையுடை பாவனை, தந்திரம், கபடம், தனியார்வம், தற்புகழ்ச்சி, திட்டம், திடீர் உணர்ச்சிகள், பிரத்தியேக பாசங்கள், பதவி மோகம் முதலிய அம்சங்கள் மன அடித்தளத்தில் செயற்படும்.

## விதி எண் — ஐந்து

ஐந்து என்ற எண் விதி எண்ணுயின் விரிந்த மனப்பான்மை, ஊக்கம், செயல் முறையார்வம், தீவிர நடவடிக்கைகள், கடின உழைப்பு, சரளமான பேச்சுவார்த்தை, உலகப்பற்று, நீதி, நியாயம், வல்லமை, பொருட்சேர்க்கை, வியாபாரச் சிந்தை, சமூக சேவை, கண்டத்தில் கவர்ச்சி, சமூகக் கிரியைகள், சடங்குகளில் ஆர்வம், எல்லோரிடமும் சேர்ந்து — சேராமல் இருக்கும் திறமை முதலிய அடி இயல் குணங்கள் காணும்.

## விதி எண் — ஆறு

ஆறு என்ற எண் விதி எண்ணுகின் பொறுமை, அன்பு, ஆதரவு, இனிமை, அழகு, பரிவு, தெளிவு, கலையுணர்வு, ரசனை, இன்ப வேட்கை, ஆசை, பாசம், அகம்பாவம், வெறியுணர்வு, சோம்பல், சுகம், இளமை, சௌந்தர்யம் போன்ற குண இயல்புகள் அடித்தளத்தில் இயங்கும்.

## விதி எண் — ஏழு

விதி எண் ஏழாகவரின் மறை பொருள் ஆய்வு, மனோயியல், தெய்வீகம், செயலாற்றல், பொது அறிவு, புகழ், அந்நிய தேச ஆவல், செல்வம், பூமி சேர்க்கை, பொருள்வளம், கடின சித்தம், துன்ப உணர்ச்சி, விவசாயப் பிரீதி, விஞ்ஞானம், இயற்கைப்பிரீதி, ஆத்ம உலக அநுபவம், பாவஞ சக்தி, சிரமம், தொழில் விசுவாசம், மனக்குழப்பம், சுதந்திர எண்ணம், வேற்றுமை, விரக்தி, வீண் சந்தேகம் போன்ற குணயியல்புகள் அடிமனதில் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி எண் — எட்டு

விதியெண் எட்டாகவரின் ஆர்வம், ஆசாபாசம், பிறர்நலம், பக்தி, விரக்தி, துவேஷம், ஆர்ப்பாட்டம், நெருக்கடி, விஷமம், ஏமாற்றம், கெடுபிடி, அரசியற் தர்மம், ஜனக்கிளர்ச்சி, மனக் கிளர்ச்சி, மனிதாபிமானம், இயற்கைக்கோளாறு, கர்மக் கோளாறு கள், விதி வழி வாழ்க்கை, மாயாவாதம், மயக்கம், வெறியுணர்வு, லஞ்சம், பழிக்குப் பழிநோக்கு, முதலிய குணங்கள் அடித்தள மன தைச்சாரும்.

## விதி எண் — ஒன்பது

ஒன்பது எண்ணை விதியெண்ணாகக் கொண்டவர் விடுதலை யுணர்ச்சி, மனோவேகம், பரஸ்பரநோக்கு, சமத்துவம், கர்மத்தொ டர்பு, விடாமுயற்சி, பிடிவாதம், சகிப்புத்தன்மை, உணர்ச்சிப் பிர வாகம், பரந்த மனப்பான்மை, எதிர்ப்புச்சக்தி, உலகியல்விவேகம், காரிய சித்தி, கருணை, சட்ட திட்டம், விதிவாழ்க்கை, சிரமம், சிக் கனம், பிரயாணம், பரிவு, தீர்வு, தண்டனை, தர்மம், கருமம், முத லிய அம்சங்கள் நிறைந்த குணகுணங்களை அடி மனத்தில் கையாண்ட வராவர்.


அச்சாகிக் கொண்டிருக்கிறது
ஆபாசமல்ல, விரசமுமல்ல
தடைசெய்யப்படாத பண்பட்ட படைப்பு
வயது வந்தோருக்கு மட்டுமல்ல

★ மனைவியே சொர்க்கம் ★

ஆசிரியர்

A. SIVARAJAH: B. A; B. Phil.

(எண்சோதிட முறையில் உங்கள் மனைவியைத் தெரிவு செய்து சொர்க்கத்தில் நீந்தும் அதிர்ஸ்ட சாலியாக வருவதை இந் நூல் விளக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்து அதிர்ஷ்டகரமாக அமைந்துவிட்டால் உங்கள் தலை எழுத்தையே மாற்றியமைக்கலாம்.

ரேகை, சோதிடம், சாதகம் இவை சரியாகப் பார்க்கப்படுமானால் விஞ்ஞானம் உலகத்தைக் கணிப்பது போலவே இவை வாழ்க்கையைக் கணித்து விடும். இறைவனுடைய படைப்பில் ஒரு கன்றுக் குட்டிக்குக் கூட ஜாதகம் இருக்கிறது. உலகத்தைப் படைத்த இறைவனின் உள்ளமே கணிதமயமானது எண்களை ஒதுக்கும் எண்ணங்களால் உலக வாழ்வு உருப்படாது. அந்தளவிற்கு அகிலமெங்கும் ஆளுகின்ற வல்லமையுடன் எண்கள் விளங்குகின்றன.

சோதிடத்தில் மிகச் சக்தி வாய்ந்த சாதனமாக இன்று எண்களே திகழ்கின்றன. எண்கணித சோதிடத்தின் முக்கிய சிறப்பு வெற்றிக்கான வாய்ப்புக்களை வழங்குவது தான். துயரப்படுபவர்களைத் தேற்றலாம். அதற்குரிய வசதியும் வல்லமையும் எண்கணித சோதிடத்தில் இருக்கின்றன. பிறந்த எண், கூட்டெண் ஆகியவற்றிற்குப் பொருந்தக்கூடிய எண்ணாக வருகின்ற விதத்தில் பெயரை மாற்ற முடியும். அதன் மூலம் வாழ்வில் வெற்றி காண வாய்ப்பைக்காணலாம்.

கைரேகை, ஜாதகத்தில் எண்களை மாற்ற முடியாது. ஆனால் எண்சோதிடத்தில் பெயருக்குரிய எண்ணை மாற்றமுடியும். அதன் மூலம் ஆதாயமும் அடையலாம். எண்களால் எண்ணங்களை உருவாக்கலாம் திருவாக்கலாம்.

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

இந்த வள்ளுவன் குறளிலே நாம் காணுகின்ற உண்மையென்ன...? மனிதன் சிறப்பாக வாழ்வதற்கு எண்ணும் எழுத்தும் இரு கண்கள் எனக் கூறப்பட்டிருப்பதை நோக்கக்கூடியதாக இருக்கின்றது. ஒருவர் பிறந்த எண்ணிற்குத்தகுந்த முறையில் எழுத்து அமையக்கூடியதாக பெயர் எண்ணை அமைப்பதால் வாழ்க்கையில் தலைநிமிர்ந்து சிறப்பாக வாழ்ந்து முன்னேற்றம் அடையலாம்.

> ''எண்ணில்லாதவர் கண்ணில்லாதவர்
> எழுத்தில்லாதவர் தலையில்லாதவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் எழுத்தும் இசைய அமையின்
எண்ணிய வாழ்வு வளமுடன் வாய்க்கும்''

உங்கள் பெயர் எண்கள் அதிர்ஷ்டகரமானதா...? உங்கள் பெயர் எண்கள் மட்டும் இலக்குள்ளதாக அமைந்துவிட்டால் போதும் வெற்றிகள் உங்களை நாடியே ஓடிவந்துவிடும். உலக அறிவுச் செல்வம் எல்லாவற்றையும் 26 எழுத்துக்குள் அடக்கி வெற்றிநடை போடும் வேந்தன் மொழியாம் ஆங்கிலத்தில் உங்கள் வெற்றிக்கான எண்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

*1* A. I. J. Q. Y
*2* B. K. R
*3* C. G. L. S
*4* D. M. T
*5* E. H. N. X
*6* U. V. W
*7* O. Z
*8* F. P

ஒருவரின் பிறந்ததிகதியும் அவரின் பெயரும் ஒன்றுக்கொன்று பொருந்தும் வகையில் அமைந்தால்த்தான் அவரின் வாழ்வு மங்காப் புகழை கொடுக்கும். தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் பிறந்த திகதி 26 ஆகும். 26 ஆம் திகதியில் ஒருவர் பிறந்தால் அவரின் பெயர் எண் 9 இல் அமைந்துவிட்டால் அதிர்ஷ்டம் பெருக நிறைய வாய்ப்பிருக்கின்றது.

A. AMIRTHALINGAM
1 1 4 1 2 4 5 1 3 1 5 3 1 4 = 36 = 9

தந்தை செல்வா 31 ஆம் திகதி பிறந்தவர் அவரின் கீர்த்திக்கு பெயர் எண்களே காரணமாகும்.

S. J. V. SELVANAYAGAM
3 1 6 3 5 3 6 1 5 1 1 1 3 1 4 = 44 = 8

சட்டத்துறைக்கு புதுமெருகு ஊட்டியவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆவர். இவர் 8 ஆம் திகதி பிறந்தவர். இவரது பெயர் ஆரம்பத்தில்

K. K. PONNAMPALAM
2 2 8 7 5 5 1 4 8 1 3 1 4 = 51 = 6

கே. கே. பொன்னம்பலம் என்றிருந்தது. பின்னர் இவரது பிறந்த திகதிக்கேற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. G. PONNAMPALAM
3 3 8755148 1314 = 53 = 8

ஜி. ஜி. பொன்னம்பலம் என்று மாற்றிய படியினுல் ஈடுபட்ட துறையில் பெரும் புகழீட்டினுர். G. G. க்கு மாருக K. K. எனப் போட்டிருப்பின் இவரது வரலாறே வேறு திசையில் மாறியிருக்கும்.

உங்களுக்கு விடயம் தெளிவாக விளங்கிவிட்டது. புரிந்தும் விட்டது என எண்ணி உங்கள் பிறந்ததிகதிக்கேற்ப உங்களுடைய பெயர் எண்களை அதிர்ஷ்ட நம்பராக்கி வெற்றியடையுங்கள்.

**1**-ந் திகதி பிறப்பவர்களின் பெயரெண்ணின் கூட்டுத்தொகை 5 இலக்கமாக நிச்சயம் அமையவேண்டும். 5, 14, 23, 32, 41, 50, 59, 68, 77, 86, 95, 104 – ஆகிய எண்களில் பெயர் வைக்க முடியும். 1 என்ற எண் சூரியன். இது உஷ்ணத்தன்மையுடையது. 5 என்ற எண் குளிர்மை தரும் புதன் கிரகம். எனவே சூட்டைக் குளிரால்த் தான் சாந்தப்படுத்த முடியும். 5, 14, 50, 68, 86, ஆகிய இலக்கங்களில் பெயர் அமையின் அதிர்ஷ்டத்தையும் 23, 41, 59, 77, 95, 104 ஆகிய எண்களெனின் மிக மிக அதிர்ஷ்டத்தையும் கொடுக்கும்; மிக மிக எச்சரிக்கை அதாவது சுகமும் துக்கமும் மாறி மாறி வருவதனுல் எவராது 32 எண்வரக் கூடியதாக தமது பெயரெண் அமைக்காமல் இருப்பது விரும்பத்தக்கது.

**2**–ந் திகதி பிறப்பவர்கள் ராகு என்ற கிரகத்தின் ஆட்சியினராகும். 2 என்ற எண்ணுக்கு 7 எண் தான் ஒன்றையொன்று கவரக் கூடியது. எனவே 2 எண்ணினர் தமது பெயரை ஒன்றில் 2 எண் வரக் கூடியதாக வைக்க வேண்டும் அல்லது 7 எண்ணுக்கு வைத்தல் மிக விசேடபலனை அளிக்கும். 2 எண் ராகு 7 எண் கேது. 2, 7 இவையிரண்டும் இரட்டைப் பிறவிகள். 2 உடன் 7 சேர்ந்தால் தான் அதிர்ஷ்டமாகும். இதை நம்புங்கள்; 2 எண் சந்திரன் அல்ல ராகுவே ஆகும். இரண்டு எண்ணை 11, 20, 29, 38, 47, 56, 65, 74, 83, 92, 101 ஆகிய எண்கள் குறிக்கும். ஏழு எண்ணை 16, 25, 34, 43, 52, 61, 70, 88, 97, 106 ஆகிய எண்களால் உணரப்படும்.

**3**–ந் திகதி பிறப்பவர்கள் தமது பெயரை 3, 6, 9 ஆகிய எண்கள் வரக் கூடியதாக அமைக்க வேண்டும். 3 எண் குருவாகும். இவர் வெள்ளி அல்லது சுக்கிரன் – இதன் இலக்கம் 6; செவ்வாய் – இதன் எண் 9 என்பவர்களுடன் நன்ருக ஒத்துப்போவார். மூன்றை 12,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21, 30, 39, 48, 57, 66, 75, 84, 93, 102 ஆகிய இலக்கங்களும் ஆறினை 15, 24, 33, 42, 51, 60, 78, 87, 96, 105 என்பனவும் ஒன்பதை 18, 27, 36, 45, 54, 63, 72, 81, 90, 108 ஆகிய எண்களும் கொண்டிருக்கும்.

**4**—ந் திகதி பிறப்பவர்கள் சந்திரனின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். சந்திரனுக்கு என்றுமே சுய ஒளி கிடையாது. சூரியனிடமிருந்து தான் ஒளி பெற்றுப்பிரகாசிப்பர். இது விஞ்ஞானம் கண்ட மெய்ஞானம். எனவே 4ந் திகதிக்காரரின் பெயரெண் 1 ஆக இருக்க வேண்டும்; இவர்களின் பெயர் எண் 19, 28, 37, 46, 55, 64, 73, 82, 91, 100 ஆகிய எண்களில் அமைப்பது மிக மிக நன்மையைத்தரும்.

**5**—ந் திகதி பிறப்பவர்களின் பெயரெண் 1 வரக் கூடியதாக அமைவது மிக மிக நன்று; ஏனெனில் 5 என்பது குளிர்தரும் புதன்; வாழ்வில் குளிர்மை என்றுமே இருப்பதை இயற்கையும் விரும்பாது. புதனும் சூரியனும் சேரும் பொழுது அதாவது ஐந்தும் ஒன்றும் சேர வாழ்வு மின்னல் வேகத்தில் முன்னேறும். எனவே 5 ஆம் திகதி பிறப்பவர்கள் தமது பெயரை 1 எண் வரக்கூடியதாக வைத்தால்த் தான் பிரகாசிப்பார்கள். 5ம் திகதி பிறப்பவர்கள் எந்த எண்ணிலும் பெயர் வைக்கலாம். ஏனெனில் புதன் எல்லோருடனும் நட்பாக இருப்பர். அப்படி இருந்தாலும் வாழ்வு வளம் பெற 19, 28, 37, 46, 55, 64, 73, 82, 91, 100 ஆகிய இலக்கங்களில் பெயர் வைக்கலாம்.

**6**—ந் திகதி பிறப்பவர்கள் சுக்கிரன் அல்லது வெள்ளியின் செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றார்கள். 6க்கு பொருத்தமாக 6, 3, 9 ஆகிய இலக்கங்கள் வரக்கூடியதாகத் தமது பெயரினை வைத்தால் துரிதகதியில் வாழ்வு மேம்பாடடையும்;

**7**—ந் திகதி பிறப்பவர்கள் கேது என்னும் கிரகத்திற்குரியோராவர். எங்கு ராகுண்டோ அங்கே கேதுண்டு. எங்கு கேதுண்டோ அங்கு ராகுண்டு. எனவே 7 ஆந் திகதி பிறப்பவர்கள் தமது பெயரினை 7 அல்லது 2 இலக்கம் வரக் கூடியதாக அமைக்க வேண்டும்.

**8**—ந் திகதி பிறப்பவர்கள் நினைக்கவே மயிர்க்கூச்செறியும் சனி பகவானின் விதியின் கைப்பாவையினர். என் மதிப்புக்குரிய குருதேவன் பண்டிட்ஸேதுராமன் அவர்களின் அபிப்பிராயப்படி 8 எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்களின் வாழ்வில் விதி புகுந்து விளையாடுவதினுல் இவர்கள் கடைத்தேற வேண்டுமாகில் 5 எண் வரக்கூடியதாக மட்டும் தமது பெயரினை அமைக்க வேண்டும். இப்படி அமைத்தால் இவர்கள் முழுக்க முழுக்க விதிவசப்பட்ட மாந்தராக இருக்காமல் விதியின் கைப்பாவையாக இருக்காது உலகியலில் ஈடுபட்டு புகழடைய முடியும் என்கின்ருர். ஆனுல் அனுபவ ஞானத்தைக் கொண்டு பார்க்குமிடத்து 8 ஆந் திகதி பிறப்பவர்கள் தமது கையொப்பம் அல்லது பெயரெண்ணை 5 க்கு அமைத்தால் வளமான வாழ்க்கை வளங்கெட்டு நாதியற்று நாயாக தெருத்தெருவாக அலேய வைத்துவிடும். நாயும் பூனையும் என்றுமே ஒற்றுமையாக இருந்ததில்லை

| DOG | CAT |
|---|---|
| 4 7 3 = 5 | 3 1 4 = 8 |
| 14 | 8 |

எனவே 8 ஆந் திகதி பிறப்பவர்கள் மட்டும் தமது பெயரெண்ணை 8 வரக் கூடியதாக 17, 26, 35, 44, 53, 62, 71, 80, 98, 107 ஆகிய எண்களில் வைக்கலாம். மாமேதை சட்டத்துறை அமரர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் பிறந்த திகதி 8; இவரின் பெயரெண்ணும் 8 ஆகும்.

G. G. P O N N A M P A L A M
3 + 3 + 8 + 7 + 5 + 5 + 1 + 4 + 8 + 1 + 3 + 1 + 4 = 53 = 8

8 ஆந் திகதி பிறப்பவர்கள் எத்தகைய நிலை வந்துற்ருலும் 1 எண்ணுக்கு அதாவது சூரிய கிரகத்தின் ஆதிக்கத்திற்கு ஒரு நாளுமே பெயர் வைக்கக்கூடாது. 8 சனி 1 சூரியன்—சனியும் சூரியனும் பகை வருமல்ல நண்பருமல்ல. சனி மகன் சூரியன் தந்தை; தனயனுக்கும் தந்தைக்கும் இங்கு சுமுகமான உறவில்லை. காரணம் இந்த வரலாறு இதைத் தெளிவுபடுத்தும்.

சூரியனுக்கு பெண் கொடுப்பார் எவருமில்லை. உங்களுக்குத் தெரிந்த விடயம் தானே... சூரியபகவான் அக்கினி; நெருப்பு, தீ... எப்படி பெண்களால் நெருங்கமுடியும். பெண் கொடுக்கச் சம்மதித்தாலும் எந்தப் பெண் துணிவுடன் சூரியனுக்கு வாழ்க்கைப் படமுடியும்? சூரியன் தனக்கு எந்தப் பெண்ணும் இசைகின்ருள் இல்லை என்று கோபங் கொண்டான். அக்கினி பொங்கி எரிந்தால் உலகமே பஸ்மீகரணமாகிவிடும். ஆதவனின் கோபத்தினுல் அண்ட சராசரங்கள் முப்பத்து முக்கோடி தேவர்களும் நடுநடுங்கினுர்கள்; செய்வதறியாது திகைத்து நிற்க பூமாதேவி புவியரசி எதையுந்தாங்கும் இதயத்துடன் உயிரினின்றும் ஆத்மாபிரிவது போல தனது நிழலை ''சாயா'' என்னும் பெண்ணுருவாக்கி சூரிய பகவானுக்கு மனைவியாக அனுப்பினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடக்கிடைக்காத தங்கம் காணக்கிடைக்காத செல்வம் — ஆம் சாயா சூரியனுக்கு வாழ்க்கைப்பட்டதன் பிரகாரம் தான் சனி பகவான் சூரியனின் புதல்வனுகப் பிறந்தான். சனியன் பிறந்ததும் குழந்தையைப்பார்த்து வரும்படி சூரியன் தன் தேர்ப்பாகனை அனுப்பினுன். தேவ சாரதிகளுள் தலை சிறந்த வடிவழகன் சூரியனின் சாரதி. தனது தலைவனின் மகனைப் பார்க்க குதூகலத்துடன் ஓடிஞன்; பார்த்தான் சனியை. சனி தேர்ப்பாகனைப் பார்த்தது. அவ்வளவு தான் சனி பார்த்த பார்வையில் அழகு விகாரமாயிற்று; தேர்ச் சாரதியின் இருகால்களும் முடமாயின.

குய்யோ முறையோவென்று தேர்ச்சாரதி அழுது புலம்பி கடுகதி வேகத்தில் தேரைச் செலுத்தி வந்து சூரியனுக்கு நடந்ததைக் கண்ணீர் விட்டே அழுது சொன்னுன். நடந்தகதை கேட்டு ஆச்சரியப்பட்ட அக்கினிகளுக்கெல்லாம் தலைவன் சூரியன் இப்படிப்பட்ட சக்தி மிக்கவனு என் மகன்? என நினைத்து மின்னல் வேகத்தில் ஓடி வந்தான்; மகனே சனியா... அழைக்கின்ருன் பகவான் சூரியன்; சாடையாக சனி தந்தையைப்பார்க்கின்ருன். பாழ்பட்டதே சூரியனின் தேகம். உடனே குஷ்டரோகியாக மாறினுன் சூரியன். யாரை ஐயா சனியன் விட்டது.

இப்படியா ஒரு சனி சனியாக எனக்கு மகனுகப் பிறக்கவேண்டி நேரிட்டதேயென்று ஆத்திரமிகக் கொண்ட சூரியன் சனியனின் இரு கால்களையும் பற்றி தூக்கி ஆகாயத்திலே எறிந்தான். சனி சுழன்று சுழன்று எல்லாக்கிரகங்களையும் தாண்டிச் சென்று சூரிய ஆதிக்கம் மிக மிக குறைந்த இடத்தில் வந்து விழுந்தான், ஐயகோ பெற்ற அப்பன் இப்படி என்னைத் தூக்கி எறிவானு...? கோபங் கொண்டான் சனியன்; அன்று தொட்ட கோபம் இன்றும் இன்னும் சனியை விட்டுப்போகவே இல்லை. சூரியனே தனது புதல்வனுல் அழகிழந்து குஷ்டரோகியாக மாறிய துரோகச் செயலினை இன்றும் மறக்கவில்லை. எனவேதான் தந்தைக்கும் மைந்தனுக்கும் இடையே நல்ல உறவுகள் இல்லாமையினுல் 1 க்கும் 8 க்கும்; 8 க்கும் 1 க்கும் என்றுமே பொருத்தமில்லை. 1:8 க்கு பொருத்தம் போல் காணப்படினும் இப் பொருத்தம் கானல் நீர்; மாயத்தோற்றம்; தற்காலிக வெற்றியைத்தான் குறிக்கும்.

எனவே அன்பர்களே நீங்கள் 8 ஆந்திகதியில் பிறந்திருந்தால் 5 எண் 1 எண் ஆகிய இரண்டு எண்களும் வரக்கூடியதாக ஒரு பொழுதும் உங்கள் பெயர் எண்ணை வைக்கவே வேண்டாம். வரலாறும் அனுபவமும் உணர்த்திய மாபெரும் உண்மை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இராமனை நம்பினாலும் பண்டிட் ஸேதுராமனை மட்டும் நம்பாதீர்கள்; இவரை நம்பியபலர் இன்று இந்தியாவில் தெருத்தெருவாக அலைகிறார்கள் என்ற கோஷத்தை சில சோதிடர்கள் எழுப்பி வருவது உண்மைக்குப் புறம்பான செய்தியல்ல. அண்மையில் பண்டிட் ஸேதுராமன் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது பலர் அவரைப் பேட்டி கண்டு அறிந்த மாபெரும் உண்மை என்னவெனில் "அதிர்ஷ்ட விஞ்ஞானம் அல்லது நீங்களும் மிக்க அதிர்ஷ்ட சாலியாகலாம்" என்ற ஆசிரியரது நூலில் நீக்கப்படக் கூடிய பல வரிகள் இடம் பெற்றிருக்கின்றன" என்பதாகும்.

சனி கவலை மிகக் கொண்டு; தந்தையால் கைவிடப்பட்டதை எண்ணி ஏங்கித்தவமிருந்து பெற்ற மகிமை இதுதான்; அதாவது "சனியன் மனம் வைத்தால் அந்த இடம் செழிக்கும்; மனம் மாறினால் பார்த்த இடம் கருகும்; எனவேதான் 8 எண் காரர் அரசராயு மிருப்பர், விரக்தியுற்று ஆண்டியாயும் மாறுவர்.

9ம் திகதி பிறந்தவர்கள் செவ்வாய் கிரகத்தினர். இவர்களின் பெயரெண் 3, 6, 9 இலக்கங்கள் வரக் கூடிய எண்ணில் அமைக்கலாம்.

10ம் திகதி பிறந்தவர்கள் தமது பெயரினை 5 எண் வரக்கூடியதாக அமைக்க வேண்டும். 10 என்ற எண்ணில் வரும் 0 என்ற பூஜ்சியத்திற்கு பெறுமாணம் இல்லை. எனவே 1 சூரியன்; 5 புதன்; இரண்டும் நண்பர்கள். சூரியன் வெப்பம் புதன் குளிர்; இரண்டும் ஐக்கியமாகிவிடும்.

11ம் திகதி பிறப்பவர்கள் தமது பெயரினை 2 அல்லது 7 எண்கள் வரக் கூடியதாக வைக்கவேண்டும். $11 \longrightarrow 1+1=2$ இந்த இரண்டு என்ற எண் ராகுவினைச் சுட்டும். 2க்கு மிகப் பொருத்தம் 7 ஆகும்.

12ஆந் திகதி பிறப்பவர்கள் 3, 6, 9 ஆகிய எண்கள் வரக்கூடியதாக தமது பெயரினை அமைத்து கையெழுத்திட்டுவரின் மிகமிக அதிர்ஷ்டசாலிகளாக மாறுவர். $1+2=3$ இது குருபகவான் ஆவர்.

13ஆந் திக்தி பிறப்பவர்கள் $1+3=4$ அதாவது சந்திரனின் ஆளுகைக்குட்பட்ட இவர்களின் பெயரெண் 1 எனவரும் இலக்கத்தில் அமைவது சாலச் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14** ம் திகதி பிறந்தவர்களின் பெயரெண் 5 அல்லது 1 இலக்கத்தில் அமைய வேண்டும். 14 ⟶ 1 + 4 = 5 புதன் இந்த எண்ணுல் சுட்டப் படும். குளிர்தரும் தெய்வாம்சம் பொருந்திய புதன் வெப்பமிக்க 1 எண்ணுக்குரிய சூரிய தேவனுடன் சேர்ந்தால் வாழ்வே செழித்து பசுஞ் சோலையாக மாறிவிடும்:

**15** ஆந் திகதி பிறந்தோர் 1 + 5 = 6 சுக்கிரன் அல்லது வெள்ளி என்ற கிரகத்தின் செல்வாக்கின் கீழ் இருப்பர். 6 க்குப் பொருத்த மாக 3, 6, 9 ஆகிய எண்களில் தமது பெயரினை வைக்கலாம். இல் லாவிட்டால் 1 எண் வரக் கூடியதாகவும் வைக்க முடியும்.

| | நகமும் | சதையும் |
|---|---|---|
| | NAIL | FLESH |
| (10) = | 5 1 1 3 | 83535 = 24 ⟶ 6 |

ஆறும் ஒன்றும் மிக நெருங்கிய ஒற்றுமையுடையன.

**16** ஆந் திகதி பிறந்தோர் 1 + 6 = 7க் குரிய கேது ஆதிக்கத்தவரா வர். இவர்களின் பெயர் அல்லது கையெழுத்தெண்கள் இரண்டு அல்லது ஏழு வரக் கூடியதாக இருக்க வேண்டும். ஏழு கேது இரண்டு ராகு; இவையிரண்டும் மிகப் பொருந்துவன.

**17** ந் திகதி பிறந்தவர்கள் தமது பெயரினை நிச்சயம் 5 எண்ணுக் கும் கையொப்பத்தினை மட்டும் 9 எண்ணுக்கும் அமைத்து வந்தால் வாழ்வில் மிக மகோன்னதமான நிலைக்கு வந்து விடலாம் என்பதை பலரின் வாழ்க்கையின் மூலம் அனுபவவாயிலாக அறியமுடிகின்றது: உதாரணமாக தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 17 ஆந் திகதி பிறந்துள்ளார்கள். அவரின் பெயரெண்கள் 5 ஆகவும்; அவரின் அழைப் பெண் அல்லது செல்வாக்கு எண் 9 ஆக வருவதையும் காணமுடிகின்றது.

M. G. RAMACHANDRAN
4 3 2 1 4 1 3 5 1 5 4 2 1 5 = 41 = 5

MGR
4 3 2 ⟶ 9

17ந் திகதி 1 + 7 = 8 இது சனியைக் குறிக்கும். 17 ந் திகதி பிறப் போர் சனியின் ஆதிக்கத்தைப்பலப்படுத்த தமது பெயரெண்களை 8 எண்ணுக்கு வைத்தாலும் பாதகமே இல்லை. 1 எண்ணுக்கு பெயர் வைக்கவே கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18** ந் திகதி பிறப்பவர்கள் 1+8 = 9 செவ்வாய் ஆதிக்கத்தினைக் கொண்டிருப்பதனால் தமது பெயரெண்களை 3, 6, 9 வரக்கூடியதாக அமைத்தல் வேண்டும்.

**19** ந் திகதி பிறப்போர் 1+9 ⟶ 10 = 1 சூரிய ஆதிக்கத்தினர். இவரின் பெயரெண்கள் புதன் என்ற குளிர்மை தரும் கிரக எண் 5 ஆக அமைப்பது வாழ்வில் வசந்தத்தைத்தரும்.

**20** ந் திகதி பிறந்தவர்கள் 2 எண்ணுக்குரிய ராகு ஆதிக்கம் இருப்பதினால் இவரின் பெயரெண்கள் கேதுவைக் குறிக்கும் 7 எண்ணில் வைப்பது மிகமிக அதிஸ்டத்தைத்தரும்.

**21** ந் திகதி பிறந்தவர்களின் பெயரெண்கள் மூன்று எண்ணுக்குரிய குரு பகவானின் நண்பர்களாக விளங்கும் 6 (சுக்கிரன்) 9 (செவ்வாய்) எண்களுக்கு வைக்கலாம் இல்லையேல் மூன்று எண்ணுக்கு அமைக்கலாம்.

**22** ந் திகதி பிறப்பவர்கள் 2 + 2 = 4 சந்திர ஆதிக்கத்தினர். சுய ஒளி அற்ற சந்திரன் சூரிய ஒளியை இரவல்வாங்கிப் பிரகாசிப்பான் சூரியன் 1 எண்ணினன் 1 க்கு 4ம், 4க்கு 1ம் பொருந்தும் எனவே இத்திகதியில் பிறப்போரின் பெயரெண் 1 ஆக அமைவது வியக்கத்தக்க வெற்றியைத்தரும்.

**23** ந் திகதி பிறப்பவர்கள் எல்லோரிடமும் நண்பனாகப்பழகும் 5 எண்ணுக்குரிய புதன்கிரகம் ஆதலால் இவர்களின் பெயரெண் எந்த இலக்கத்திலும் அமையலாம். விசேடமாக 5 இலக்கத்தில் அமைவது கூடுதலான நன்மையைத்தரும். 5 புதன் 1-சூரியன்- எனவே 1:5க்கும் 5:1க்கும் பொருந்துவதனால் ஒன்றிலும் பெயர் வைக்கலாம்.

**24** ந் திகதி பிறப்பவர்கள் 2 + 4 = 6க்குரிய சுக்கிர கிரகத்தினராகையினால் இவர்களின் பெயரெண்கள் 1, 3, 6, 9 ஆகிய எண்களில் முறையே சூரிய, குரு, சுக்கிர, செவ்வாய் முதலான கிரக நாயகர்களின் சேர்க்கைக்கேற்ப அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25** ந் திகதி பிறந்துள்ளோர் 2 + 5 = 7 கேதுவினர். இவர்களின் பெயரெண்கள் 7, 2 எண்களில் அமைவது சோதனைகளை வென்று சாதனைகளைப்புரிய முடியும்;

**26** ம் திகதி பிறப்பவர்கள் 2 + 6 = 8 க்குரிய சனியனின் ஆதிக்கத்தினர். 26ம் திகதி பிறந்து வாழ்வில் மேன்மையடைந்தவர்களின் பெயரெண்களின் கூட்டுத்தொகை 9 ஆக நிச்சயம் அமையவேண்டும். உதாரணமாக இலங்கையின் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களை எடுத்துக் கொண்டால் பிறந்ததிகதி 26 ⟶ 2 + 6 = 8 பெயரெண்கள்

A. AMIRTHALINGAM

1 14 124 5 1 3153 14 = 36 = 9

செல்லப்பெயர்

AMIR

1 4 1 2 = 8

இவரின் வாழ்வின் மேன்மைக்கு சோதனைகளைத்தாங்கி வேதனைகளைச் சுமந்து சாதனைபுரிவதில் 8ம் 9உம் களிநடம்புரிவதைக் காண முடிகின்றது. 26ம் திகதி பிறப்பவர்களின் பெயரெண் 8 ஆகவருமெனினும் அது நன்றாகும்.

**27** ந் திகதி பிறப்பவர்கள் 2 + 7 = 9 செவ்வாய் ஆதிக்கத்தினர். 3, 6, 9 வரக்கூடிய எண்களில் இவர்களின் பெயரெண்கள் அமைவது வெற்றியின் திறவுகோலாகும்.

**28** ந் திகதி பிறப்பவர்கள் 2 + 8 = 10 = 1 சூரிய ஆதிக்கத்தினராக இருப்பினும் சூரிய செல்வாக்கு இவர்களுக்கு மிகக்குறைவாகையினுல் கண்ணின் கருமணிகள் பாதிக்கப்பட்டு பார்வையின் பலங்குன்றி கண்ணுடி அணிகின்றனர். இவர்களின் பெயரெண்கள் நிச்சயம் 1 எண்ணில் அமையவேண்டும். அப்படி அமைந்தால்தான் இவர்களில் ஓரளவாவது சூரிய ஆதிக்கம் காணப்படும். 5 எண்ணுக்கும் பெயரினை வைக்கலாம்.

**29** ந் திகதி பிறந்தவர்கள் 2 + 9 → 1 + 1 = 2 ராகுவின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் இவர்களின் பெயரெண்கள் 7 அல்லது இரண்டில் ஏற்படின் வாழ்வு வளம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30** ந் திகதி பிறப்பவர்கள் மூன்று எண்ணுக்குரிய குருவின் ஆதிக்கத்தினர். இவர்களின் பெயரெண்கள் 3, 6, 9 ஆகிய எண்களில் அமையலாம். ஆக்கமும் பெறலாம்.

**31** ந் திகதி பிறந்தவர்கள் 3+1=4 சந்திரனின் ஆளுகைக்குட்பட்ட இவர்கள் தமது பெயரினை 1 எண்வரக்கூடியதாக அமைத்தல் வேண்டும்.

## நம்பிக்கை வானில் மின்னல் கீற்று

ஒருவர் தமது பெயரினை அதிர்ஷ்டமளிக்கக்கூடிய எண்ணுக்கு வைக்கும்பொழுது எண் சோதிடத்தின் அடிப்படைத் தத்துவார்த்த உண்மையை அறியாது மனம்போன போக்கெல்லாம் பெயர் அமைத்து உள்ள வாழ்க்கையையும் நாசமாக்கி விடுகின்றார்கள்.

(1) தமது பிறந்த திகதி எதுவோ அந்த இலக்கத்திற்கேற்ப வரும் கூட்டுத்தொகைக்கு தமது பெயரினை அமைக்கின்றனர். உதாரணமாக 8ஆம் திகதி பிறந்த ஒருவர் தமது பெயரினையும் 8 எண்ணில் அமைத்து விடுகின்றார்கள்.

G. G. PONNAMPALAM

3 3 8 75 5 1 4 813 1 4 = 53 = 8

(2) தமது பிறந்த திகதி மாதம் ஆண்டு ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற எண்ணுக்கு தமது பெயரினை ஏற்படுத்துகின்றார். உதாரணமாக

திகதி மாதம் ஆண்டு
26 + 8 + 1947 = 37 = 10 = 1

V. A. SIVARAJAH

6 1 3161 21115 = 28 = 10 = 1

(3) இன்னுஞ் சிலர் தமது பிறந்த மாதம் எதிலோ அந்த மாதத்திற்குரிய எண்ணுக்கு தமது பெயரினைச் சமைக்கின்றனர். உதாரணமாக

(A) ஒருவர் ஆவணி அதாவது ஆகஸ்ட் மாதம் பிறந்தால் அதற்குரிய எண் எட்டு வரக்கூடியதாக தமது பெயரினை அமைப்பார்.

E. NADARAJAH

5 5 1 41 21 115 = 26 = 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(B) வேறு சிலர் தாம் பிறந்த மாதத்தின் ஆங்கிலப் பெயருக்குரிய எண் வரக்கூடியதாகத் தமது பெயரினை எழுதுவதுண்டு. உதாரணமாக ஒருவர் APRIL மாதம் (ஏப்ரல்) பிறந்தவரெனக் கொண்டால்

APRIL
18213 = 15 = 6

ஏப்ரல் மாதத்தின் ஆங்கில எழுத்துக்குரிய எண்களைக் கூட்டி வருகின்ற முழு எண்ணுக்கேற்ப பெயர் அமைப்பர்.

A. RATNARAJAH
1 2 14 51 2 1115 = 24 = 6

(4) சில எண்கள் மிகமிக அதிஷ்டத்தை அளிக்கக்கூடியன. அவையாவன 19, 23, 37, 41, 45, 59, 72, 77, 95, 104, 108, ஆகும் ஒருவர் தமது பெயரெண்களை எந்தவித முன்யோசனையுமின்றி ஏதோ அதிஸ்டமளிக்கும் எண்ணுக்கு மாற்றினுல் சரியென்ற மனப்பான்மையினுல் மேலே காணப்படும் எண்களுக்கு மாற்ற முயல்கின்றூர்கள்.

(5) ஒருவர் தான் பிறந்த ஆண்டுக்குரிய எண் எதுவோ அதற்கு பெயர் ஏற்படுத்துகின்றூர்கள். உதாரணமாக 1947ஆம் ஆண்டு பிறந்த ஒருவர் மூன்று வரக்கூடியதாக 1 + 9 + 4 + 7 = 21 = 3 தமது பெயரினை வைக்கின்றூர்.

A. S. ARAVINTHI
1 3 121 615451 = 30 = 3

(6) வேறுசிலர் தாம் பிறந்த தினங்களுக்குரிய எண்களில் பெயர் வைக்கின்றூர்கள். எடுத்துக்காட்டாக ஒருவர் ஞாயிற்றுக்கிழமை பிறந்தவராஞல் ஞாயிறைக் குறிக்கும் ஆங்கிலச்சொல் SUN என்பதைச் சுட்டும் எண்ணுக்குத் தமது பெயரை வைக்க விரும்புகின்றூர்.

SUN
3 6 5 → 14 = 5
V. N. NAVARATNAM
6 5 5 16 12 1 45 1 4 = 41 = 5

SUN :- 3 + 6 + 5 → 14 = 5
MON :— 4 + 7 + 5 → 16 = 7
TUES :— 4 + 6 + 5 + 3 → 18 = 9
WEDNES :- 6 + 5 + 4 + 5 + 5 + 3 → 28 = 1
THURS :— 4 + 5 + 6 + 2 + 3 → 20 = 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FRI — 8 + 2 + 1 → 11 = 2
SATUR — 3 + 1 + 4 + 6 + 2 + 5 → 21 = 2

(7) பிரத்தியேக சில அம்சங்கள் ஒரு சில மனிதரில் காணப்படுவதுண்டு; எப்படியெனில் எண் சோதிட முறையில் ஒருவரின் கையெழுத்து அல்லது பெயர் அதிர்ஷ்டகரமாக அமைக்க வேண்டுமாயின் பிறந்த நேரம் மிகமிக முக்கியமாக இங்கு கருதப்படுகின்றது.

(A) ஆங்கிலநேரம்:- நடு இரவு 12 மணி தொடக்கம் அடுத்த நாள் நடு இரவு 12 மணி வரையுமுள்ள காலப் பகுதி ஆங்கில நாளாகும். எண்சோதிடத்தில் ஆங்கில நாளே கொள்ளப்படுகின்றது.

(B) தமிழ்நேரம்:- ஒருநாட்காலை சூரியஉதயந் தொடக்கம் மறுநாட் காலைவரும் சூரிய உதயம்வரை ஒருநாட் பொழுதை தமிழ் நாளெனக் கொள்ளப்படுகின்றது.

ஒருவர் 26ஆந் திகதி நடு இரவு 12 மணிக்கும் காலை 6 மணிக்கும் இடையே பிறந்திருப்பாராகில் இவரில் 25 ஆம் திகதிக்குரிய குணங்களும் 26 ஆம் திகதிக்குரிய தன்மைகளும் கலந்து காணப்படும். இரண்டு திகதிகளின் தன்மைகளும் காணப்படும் ஒருவரின் பெயரினை எந்த எண்ணில் அமைக்கவேண்டும் என்ற பிரச்சினை இங்கு எழுகின்றது. இரண்டு திகதி எண்களையும் சமப்படுத்தும்வண்ணம் இவரில் எந்ததிகதிக்குரிய குணங்கள் அதிகமாக இருக்கின்றதோ அந்த திகதிக்குரிய எண்ணுக்குப் பொருத்தமான எண்ணைத் தேர்ந்தெடுத்து பெயரினை அமைக்கமுடியும். உதாரணமாக 25 ஆம் திகதி பிறந்தவருக்குரிய தன்மைகள் காணப்படின் அவரின் பெயரினை 2 அல்லது 7 எண் வரக்கூடியதாகவும் 26 ஆம் திகதி பிறந்த தன்மையெனின் 8, அல்லது 9 எண்வரத்தக்கதாக பெயரினை அமைக்கலாம்.

(8) தாம் வணங்கும் தெய்வங்களின் பெயரினைத் தமது அதிர்ஷ்ட எண்ணாக பெயரில் அமைப்பவருமுண்டு. உதாரணமாக ஒருவர் தனது இஸ்ட தெய்வமாக முருகனைக் கொண்டிருப்பின் 9 எண்ணை அதிஸ்ட எண்ணாகக் கொண்டிருப்பர்.

MURUGAN
4 6 2 6 3 1 5 = 27 = 9

(9) ஒருவரின் பெயருக்கும், கையெழுத்திற்கும் வித்தியாசம் காணப்படும். பெயர்எண் அதிர்ஷ்டகரமாக அமையாவிடினும் கையெழுத்து மட்டும் வெற்றிஎண்ணாக அமைத்துவிடின் வாழ்வில் நற்பேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அடையமுடியும். பெயரினைக்காட்டிலும் கையெழுத்தே மிகமிக சக்தியைத்தரக்கூடியது.

பெயர்

A. SIVARAJAH

1 3 161211 1 5 = 22

கையெழுத்து

A. S. RAJA

1 3 2 1 1 1 = 9

ஒருவர்எண் சோதிடமுறைப்படி அதிர்ஷ்டகரமாக பெயர் அல்லது கையெழுத்தினை அமைத்தபின்னர் 108 தடவைகள் கையொப்பம் அல்லது பெயரினைப் பாவித்தபின்னர் அதிர்ஷ்டம் பெருக ஆரம்பிக்கும்.

(10) தாம் பிறந்த ராசி எந்த எண்ணைக் குறிக்கின்றதோ அந்த இலக்கத்திற்கு தமது பெயரினை வைப்பாருமுண்டு. தனுராசியில் பிறந்த ஒருவர் 3 எண்ணுக்கு பெயரிடுவார்.

DHANU

4 5 1 5 6 = 21 = 3

S. INDRAGANDI

3 15 42 1 31 5 41 = 30 = 3

மேடம் — MESHA — 18
இடபம் — VRUSHABA — 26
மிதுனம் — MITHUNA
கடகம் — KATAKA
சிங்கம் — SINHA
கன்னி — KANYA
துலாம் — THULA
விருச்சிகம் — VRUSCHIKA
தனு — DHANU
மகரம் — MAKARA
கும்பம் — KUMBHA
மீனம் — MEENA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்துக்களும் அவற்றின் மதிப்பெண்களும்

ஆங்கிலத்தில் பெயர் அல்லது கையெழுத்துவைக்கும் பழக்கம் இல்லாதவர்களுக்கு தமிழிலேயே கையெழுத்துப்போடும் பழக்கம் உடையவர்களுக்கு தமது பெயருக்குகந்த அதிர்ஷ்ட எண்களைத் தமிழ் எழுத்துக்களுக்குரிய மதிப்பு எண்களின் அடிப்படையிலேயே கணித்துக்கொள்ளவேண்டும்.

ஆ: சி வ ரா சா

$6 + 1 + 2 + 9 + 5 = 23$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அ | க | ச | ஞ | ட | ண |
|---|---|---|---|---|---|
| அ—1 | க – 4 | ச – 9 | ஞ – 3 | ட – 7 | ண — 1 |
| ஆ – 6 | கா – 9 | சா – 5 | ஞா – 8 | டா — 3 | ணா – 6 |
| இ — 2 | கி – 5 | சி – 1 | ஞி – 4 | டி — 8 | ணி — 2 |
| ஈ — 7 | கீ – 1 | சீ – 6 | ஞீ — 9 | டீ – 4 | ணீ — 7 |
| உ - 3 | கு — 6 | சு — 2 | ஞு – 6 | டு—9 | ணு – 3 |
| ஊ – 8 | கூ – 3 | சூ – 7 | ஞூ – 2 | டூ – 5 | ணூ – 9 |
| எ — 4 | கெ—8 | செ – 3 | ஞெ – 7 | டெ —1 | ணெ – 5 |
| ஏ – 9 | கே – 4 | சே – 8 | ஞே – 3 | டே — 6 | ணே – 1 |
| ஐ — 5 | கை – 9 | சை — 5 | ஞை – 8 | டை — 2 | ணை – 6 |
| ஒ – 2 | கொ — 5 | சொ – 1 | ஞொ — 4 | டொ — 8 | ணொ – 2 |
| ஓ – 7 | கோ — 1 | சோ – 6 | ஞோ — 9 | டோ — 4 | ணோ – 7 |
| ஔ – 3 | கௌ – 6 | சௌ – 2 | ஞௌ – 5 | டௌ — 9 | ணௌ – 3 |
| | க் -- 2 | ச் – 7 | ஞ் – 1 | ட் — 5 | ண் — 8 |
| | ங – 7 | | | | |
| | ங் – 4 | | | | |


| த | ந | ப | ம | ய | ர | ல |
|---|---|---|---|---|---|---|
| த—4 | ந – 8 | ப—2 | ம—6 | ய—9 | ர—4 | ல—7 |
| தா – 1 | நா – 4 | பா—7 | மா — 2 | யா —5 | ரா—9 | லா—3 |
| தி – 6 | நி – 9 | பி—4 | மி—7 | யி— 1 | ரி—5 | லி—8 |
| தீ – 2 | நீ—5 | பீ – 9 | மீ – 3 | யீ 7 | ரீ — 1 | லீ—4 |
| து – 7 | நு – 1 | பு—5 | மு – 8 | யு – 3 | ரு – 6 | லு—1 |
| தூ – 3 | நூ – 6 | பூ—1 | மூ—4 | யூ – 8 | ரூ – 2 | லூ – 6 |
| தெ – 8 | நெ – 3 | பெ – 6 | மெ—9 | யெ—4 | ரெ—7 | லெ—2 |
| தே – 4 | நே – 8 | பே—2 | மே—6 | யே—9 | ரே — 3 | லே—7 |
| தை – 9 | நை – 4 | பை—7 | மை — 2 | யை—5 | ரை —9 | லை — 3 |
| தொ – 5 | நொ—9 | பொ—3 | மொ – 7 | யொ—1 | ரொ —5 | லொ —8 |
| தோ – 2 | நோ —5 | போ—8 | மோ —3 | யோ—6 | ரோ —1 | லோ – 4 |
| தௌ—7 | நௌ—1 | பௌ – 5 | மௌ—8 | யௌ—2 | ரௌ – 6 | லௌ —9 |
| த் — 3 | ந் —6 | ப்—1 | ம்—4 | ய் —8 | ர் – 2 | ல் —5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வ | ழ | ள | ற | ன | ஜ |
|---|---|---|---|---|---|
| வ-2 | ழ-5 | ள-8 | ற-3 | ன-6 | ஜ-1 |
| வா-7 | ழா-1 | ளா-5 | றா-8 | னா-2 | ஜா-6 |
| வி-3 | ழி-6 | ளி-1 | றி-4 | னி-8 | ஜி-2 |
| வீ-8 | ழீ-2 | ளீ-6 | றீ-9 | னீ-4 | ஜீ-7 |
| வு-4 | ழு-7 | ளு-2 | று-5 | னு-9 | ஜு-3 |
| வூ-9 | ழூ-4 | ளூ-7 | றூ-1 | னூ-5 | ஜூ-8 |
| வெ-5 | ழெ-9 | ளெ-3 | றெ-7 | னெ-1 | ஜெ-4 |
| வே 1 | ழே-5 | ளே-8 | றே-3 | னே-6 | ஜே-1 |
| வை-6 | ழை-1 | ளை-4 | றை-8 | னை-2 | ஜை-6 |
| வொ-3 | ழொ-6 | ளொ-9 | றொ-4 | னொ-7 | ஜொ-2 |
| வோ-8 | ழோ-2 | ளோ-6 | றோ 9 | னோ-3 | ஜோ-7 |
| வௌ-4 | ழௌ-7 | ளௌ-2 | றௌ-5 | னௌ-9 | ஜௌ-3 |
| வ்-9 | ழ்-3 | ள்-7 | ற்-1 | ன்-5 | ஜ்-8 |

| | ஷ | ஸ | ஹ | க்ஷ |
|---|---|---|---|---|
| | ஷ-4 | ஸ-8 | ஹ-2 | க்ஷ-6 |
| | ஷா-9 | ஸா-4 | ஹா-7 | க்ஷா-2 |
| | ஷி-5 | ஸி-9 | ஹி-3 | க்ஷி-7 |
| | ஷீ-2 | ஸீ-5 | ஹீ-8 | க்ஷீ-4 |
| | ஷு-7 | ஸு-1 | ஹு-5 | க்ஷு-9 |
| | ஷூ-3 | ஸூ-6 | ஹூ-1 | க்ஷூ-5 |
| | ஷெ-8 | ஸெ-2 | ஹெ-6 | க்ஷெ-1 |
| | ஷே-4 | ஸே-7 | ஹே-2 | க்ஷே-6 |
| | ஷை-9 | ஸை-4 | ஹை-7 | க்ஷை-2 |
| | ஷொ-5 | ஸொ-9 | ஹொ-3 | க்ஷொ-2 |
| | ஷோ-1 | ஸோ 5 | ஹோ-8 | க்ஷோ-3 |
| | ஷௌ-6 | ஸௌ-[illegible] | ஹௌ-4 | க்ஷௌ-8 |
| | ஷ்-3 | ஸ்-6 | ஹ்-9 | க்ஷ்-5 |
| | | | | ௐ-8 |
| | | | | ஸ்ரீ-8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**A·SIVARAJAH** ஆ·சிவராசா B·A·B·PHIL. **A·SIVARASA**

1 3 1 6 1 2 1 1 1 5 = 22 1 3 1 6 1 2 1 3 1 = 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SIVAJI GANESHAN

31 6 111 3 1 5 53 51 5 41



M. G. R.

4 3 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org